**COS No.23/2025**

**PW–1 –சந்திரசேகர்**

**த/பெ.**

**நாள். 03.09.2026.**

**<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

**1. வா.சா.ஆ– 1, 3 மற்றும் 4** வரை ஆகியவை எங்கள் நிறுவனத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். பிரதிவாதி, நாங்கள் அனுப்பிய சரக்குகளை பெற்றுக் கொண்டது சம்பந்தமாக எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் லாரியில் அனுப்பிய ரசீதை தாக்கல் செய்துள்ளேன். நிபந்தனைகளின் படி சரக்குகளை பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பணம் செலுத்த வேண்டும் என்றால் சரிதான்.

2. **வா.சா.ஆ–5** உள்ள நிபந்தனை ஒப்பந்த்தின் படி எங்கள் சொந்த செலவில் தான் சரக்குகளை இறக்கி கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிபந்தனை பத்தின்படி பொருட்களை வாங்கிக் கொண்ட பிறகு வாதி நிறுவனம் பிரதிவாதிக்கு ஒப்புதல் மற்றும் வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் மேற்படி பொருட்களை பெற்றுக் கொண்டார்கள் என்பதற்கு ஒப்புதல் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவ்வாறு தரும் வழக்கமில்லை. நிலுவை சம்பந்தமாக பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட இமெயில் போன்ற எந்த விபரங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

3. பிரதிவாதி நிறுவனம் பாக்கி வைத்துள்ள தொகை 30 நாட்களுக்குள் வசூல் செய்ய வேண்டும் என்று நிபந்தனையில் உள்ளது என்றும், ஆனால் வழக்கு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

H.Mohamed Ansari

Digitally signed by H.Mohamed Ansari
Date: 2026.09.03 12:39:00 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.